ACHARYA SENTHIL KUMAR – NADI CLASS ROOM - 7200044010

ஓம் ஸ்ரீமத் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

ஓம் ஸ்ரீகாஞ்சி காமாட்சி அம்மன் துணை

ஓம் ஸ்ரீஉச்சிஷ்ட மஹாகணபதி துணை

நாடி ஜோதிட விதிகள்

நூல்ஆசிரியர் : ஆச்சார்யா செந்தில்குமார், சென்னை 7200044010

இந்த மின்நூல் ஆனது என்னிடம் நாடி ஜோதிடம் படித்த மாணவர்களுக்காக எழுதப்பட்டுள்ளது.

நாடி ஜோதிடம் படிக்க விருப்பம் உடைய விரும்புவர்கள் எம்மை 7200044010 என்ற எண்ணில் தொடர்பு (தொலைபேசி & வாட்ஸ்அப்) கொள்ளலாம். இதுவரை 1000 மாணவர்கள் எம்மிடம் நேரடியாகவும் ஆன்லைன் மூலமாகவும் ஜோதிடம் படித்துள்ளனர்.

நாடியில் பின்வரும் பாடங்கள் நடத்தப்படுகின்றது.

கிரக காரகத்துவங்கள், கிரக நட்பு பகை, கிரக வக்கிரம், கிரக பரிவர்த்தனை, கோள்சாரம், சாமுத்ரிகா லட்சணம், படிப்பு, மருத்துவ ஜோதிடம், பணம் வரும் வழிமுறைகள், தொழில், திருமண அமைப்பு, திருமண பொருத்தம், குழந்தை பிறப்பு, திருமண பிரிவு, ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள், வெளிநாடு செல்லும் யோகம், ஹோரா பிரஸன்னம், நாடி முறை வாஸ்து,கிரக சுழற்சி காலம் (Progression), நாடியில் பலன் கூறும் சூட்சுமங்கள், அதிர்ஷ்ட கற்கள்,பரிகார சூட்சுமங்கள் போன்ற பாடங்கள் எந்தவித ஒளிவுமறைவு இன்றி சொல்லிதரப்படுகின்றது.



பிருகு நந்தி நாடி ஜோதிட ஆசிரியர்,

திரு. ஆச்சார்யா செந்தில்குமார்,

சென்னை 7200044010

நாடி ஜோதிட விதிகள்

குறிப்பு. **ஒரு நாளைக்கு ஒரு விதியை மட்டும் படித்து ஆய்வு செய்து பார்க்கவும். மொத்தம் 34 விதிகளை கொடுத்துள்ளேன்.**

1. ஒரு ஜாதகத்தை எடுத்துக்கொண்டால், அது ஆண் ஜாதகமாக இருந்தால், குருவை முதலாகக்கொண்டு வரிசைப்படுத்தியும் பெண் ஜாதகமாக இருந்தால், சுக்கிரனை முதலாகக் கொண்டு வரிசைப்படுத்தியும் எழுதிக்கொள்ள வேண்டும்.

2. நாம் ஆய்வு செய்யக் கூடிய ஜாதகத்தில் ராசிக்கட்டத்தில், ஒரே ராசியில் ஒன்றுக்கும் மேற்பட்ட கிரகங்கள் இருந்தால் அந்த கிரகங்களை நட்சத்திர பாத சார அடிப்படையில் அல்லது பாகை-கலை முறையில் வரிசைப்படுத்த வேண்டும்.

3. நாடி முறையில் இரண்டு கிரகங்கள் சேர்க்கை என்பது ஒரு கிரகம் அமர்ந்த வீட்டிற்கு 1-5-9, 2-12, 3-7-11 வீட்டில் கிரகங்கள் இருந்தால் அவற்றை கிரக சேர்க்கையாக கருதலாம்.

4. ராகு கேதுக்கள் தான் நின்ற ராசியில் அமர்ந்த கிரகத்தையும், கடிகார சுற்றுக்கு எதிராக 2,5,9 ஆகிய ராசிகளை பார்க்கும்.

5. நாடி முறையில் இரண்டு கிரகங்கள் சேர்க்கை பெறும் போது அவை தமது காரகத்துவங்களை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும். நட்பு கிரகங்கள் சேரும் போது அவை நல்ல பலன்களையும், பகை கிரகங்கள் சேரும் போது கெடு பலன்களும் நடைபெறும்.

6. கிரகங்கள் தமது ஆட்சி,நட்பு, உச்ச வீட்டிலோ நின்று, பலம் பெற்று இருந்தாலும், அந்தக் கிரகம் நின்ற வீட்டுக்கு இருபுறமும் 2 மற்றும் 12வது வீட்டில் பகைக் கிரகங்கள் நின்றுவிட்டால், அந்தக் கிரகம் தனது பலத்தில் பாதியை இழக்கும்.

7. கிரகம் சுயபலம் இல்லாமல், பகை நீச்சம் பெற்று இருந்து, இரு பகைக்கிரகங்களுக்கு மத்தியில் இருந்தால் கெடுதலான பலனையே தரும்.

8. ஒரு கிரகம் அமர்ந்த வீட்டிற்கு இருபுறமும் சுப கிரகங்கள் இருந்தால் அந்த கிரகம் சுப பலன்களை தரும்.

9. ஒரு கிரகம், இரு நண்பர்கள் மத்தியில் இருந்தால் நன்மையான பலனையும் இரு பகைக் கிரகங்களின் மத்தியில் இருந்தால் தீமையான பலனையும் அளிக்கும்.

10. ஒரு ஜாதகத்தில் பலன் கூறும் முன்பு அந்த ஜாதகத்தில் வக்கிரம், பரிவர்த்தனை, இருக்கின்றதா என்பதை முதலிலேயே பார்த்துவிட்டுதான் பலன் சொல்ல வேண்டும்.

11. வக்கிரம் அடைந்த கிரகங்கள் அமர்ந்த வீட்டிற்கு 12 இல் ஓர் கிரகம் இருந்தால் வக்கிர கிரகத்தை ஒரு ராசிக்கு முன்நோக்கி நகர்த்தி பலன் காண வேண்டும்.

12. ஒரு கிரகம் இருந்த வீட்டுக்கு இரண்டாம் வீட்டில் ஒரு பகைக்கிரகம் இருந்து, அது வக்கிரமடைந்து காரகக் கிரகத்தை நோக்கி நகர்ந்தால், பாதகமான பலனைத் 100% தரும்.

13. ஒரு கிரகம் இருந்த வீட்டிற்கு 2ஆம் வீட்டில் ஒரு நட்புக் கிரகம் இருந்து, அது வக்கிரமடைந்து இருந்தால், அந்தக் காரக கிரகம் சுப பலனை 100% தரும்.

14. ஒரு கிரகம் ஸ்தான பலம் பெற்று இருந்தாலும், அந்தக் கிரகம் நின்ற வீட்டிற்கு 1, 5, 9, 3, 7, 11, 2, 12 ஆகிய இடங்களில் வேறு கிரகங்கள் இல்லாவிட்டால், அந்தக் கிரகம் குறிக்கும் காரகங்கள் ஜாதகருக்கு சரிவர கிடைக்காது

15. ஒரு கிரகம் நீச்சம் பெற்று இருந்தாலும், அதற்கு 2, 12, 7, 5 ஆகிய இடங்களில் நட்புக் கிரகங்கள் இருக்குமேயானால், அந்த நீச்சம் பெற்ற கிரகம் ஓரளவேனும் நன்மையான பலனையே தரும்.

16. ஒரு ஜாதகத்தில் நீச்சம் பெற்ற கிரகம்கூட சாதகமான பலனைத் தரமுடியும். உதாரணமாக குரு நீச்சம் பெற்று மகரத்தில் இருக்கிறார். குருவிற்கு 1,2,5,7,9 இல் சூரியன் இருந்தால் குருவிற்கு ஒளி கிடைத்து பலம் பெறுவார்.

17. ஒரு நீச்ச கிரகம் பரிவர்த்தனை அடையும்போது தன் சொந்த வீட்டிற்குச் செல்லும். அப்போது நீச்ச பங்கம் ஏற்படும்.

18. ஒரு கிரகம் சூரியனுடன் சேர்ந்து அஸ்தமனம் அடைந்து பரிவர்த்தனை பெற்று இருந்தால், அந்தப் பரிவர்த்தனை மூலம் தனது வீட்டிற்குச் செல்லும்போது அஸ்தமன தோஷம் நீங்குகிறது.

19. ஒரு கிரகத்திற்கு 2-12 && 3-11 இல் கிரகங்கள் இல்லை எனில் அந்த கிரகத்தின் காரகத்துவங்கள் ஜாதகரால் சரிவர அனுபவிக்க இயலாது

20. ஜெனன ஜாதகத்தில் ராகு அமர்ந்த ராசி நாதன் கேதுவுடன் சேர்க்கை பெற்று அமர்ந்தாலோ (அல்லது) கேது அமர்ந்த ராசி நாதன் ராகுவுடன் சேர்க்கை பெற்று அமர்ந்தாலோ அந்த கிரகம் குறிக்கும் காரகத்துவங்களை அனுபவிப்பதில் ஜாதகருக்கு 18 ஆண்டுகள் தடைகள் உண்டாகும்.

21. ஒரு ஜாதகத்தில் ராகு, கேது அச்சுக்கள், அந்த ஜாதகத்தை இரு பாகமாகப் பிரிக்கும். அப்படிப் பிரிக்கும்போது அச்சுக்கு மறுபுறத்தில் சனி இருந்தால் அந்த ஜாதகன் வெளிநாட்டில் வேலை பார்ப்பான் எனக் கூறலாம்.

22. ஆண் ஜாதகத்தில் குரு மற்றும் சுக்கிரன், பெண் ஜாதகத்தில் சுக்கிரன் மற்றும் செவ்வாய் இவர்களை ராகு கேது அச்சுக்கள் பிரித்தால் கணவன் மனைவி உறவில் விரிசல்கள் உண்டாகும்.

23. ஆண் ஜாதகத்தில் குரு மற்றும் சுக்கிரன், பெண் ஜாதகத்தில் சுக்கிரன் மற்றும் செவ்வாய் இவர்களில் ஒரு கிரகத்துடன் ராகுவும் மற்ற ஒரு கிரகத்துடன் கேதுவும் சேர்க்கை பெறும் போது கணவன் மனைவி உறவில் விரிசல்கள் உண்டாகும்.

24. ஒரு கிரக சேர்க்கைக்குள் அமர்ந்த கிரகம் அந்த கிரக சேர்க்கையின் பலன்களை பெறும்.

25. ஒரு கிரக சேர்க்கைக்கு நடுவில் அமர்ந்த கிரகம் பகை எனில் அந்த கிரக உறவுகள் இணைவதை தடுக்கும்

26. ஒரு கிரக சேர்க்கைக்கு நடுவில் அமர்ந்த கிரகம் நட்பு எனில் அந்த கிரக உறவுகள் இணைவதில் பாலமாக இருந்து செயல்படும்.

27. ஒரு கிரகத்தின் 2 இல் அமர்ந்த கிரகத்தின் மூலம் வரவும் 12 இல் அமர்ந்த கிரகத்தின் மூலம் செலவுகளும் உண்டாகும்.

28. உறவு வசியத்தில், ஒரு கிரகத்தின் 2 இல் அமர்ந்த கிரகம் நம்மை நோக்கி வராது. 12 இல் அமர்ந்த கிரகம் நம்மை பின் தொடர்ந்து வரும்.

29. ஒளி கிரகங்களுடன் சேர்க்கை பெற்ற கிரக காரகத்துவங்களை எளிதில் பெற முடியும்.

30. இருள் கிரகங்களுடன் சேர்க்கை பெற்ற கிரக காரகத்துவங்களை போராடித்தான் பெற முடியும். எளிதில் வசமாகாது.

31. சந்திரன் ராகுவுடன் / சந்திரன் கேது வுடன் சேர்க்கை பெற்ற கிரகங்கள், அந்த கிரக சேர்க்கைக்குள் அமர்ந்த கிரகங்கள் வெளிநாடு வெளிமாநிலம் செல்வார்கள்.

32. செவ்வாய் ராகு உடன் சேர்க்கை பெற்ற கிரகங்கள், செவ்வாய் ராகு சேர்க்கைக்குள் அமர்ந்த கிரகங்கள் வாகன விபத்து, அறுவைசிகிச்சை, தீவிபத்து இவற்றில் ஒன்றில் சிக்கும்.

33. செவ்வாய் ராகு, செவ்வாய் கேது சேர்க்கை பெற்ற நபர்களுடன் பழகும் போதும், பலன் சொல்லும் போதும் மிகுந்த கவனத்துடன் பலன் சொல்ல வேண்டும்.

34. குரு, சூரியன், சுக்கிரன் இவர்களுக்கு 2 இல் கிரகம் இருந்தால் குழந்தை பிறக்கும்.குரு, சூரியன், சுக்கிரன் இவர்களுக்கு 5 இல் கிரகம் இருந்தால் குழந்தை பிறக்கும்.சுக்கிரனுக்கு 11 இல் கிரகம் இருந்தால் குழந்தை பிறக்கும்.சுக்கிரன், சூரியன், குரு இவர்களுக்கு எத்தனை கிரகம் 2 இல் இருக்கின்றதோ அத்தனை குழந்தை பிறக்கும்.